**சுருக்கம்**

உயர் கல்வி – கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறை வகுப்புகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்கள் பெற்று வரும் தொகுப்பூதியம் ரூ.6000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர் கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண். 287

நாள்.29.12.2011.
மார்கழி 13
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டவை:–

1) அரசாணை (4D) எண். 2, உயர் கல்வி (ஜி.1) துறை, நாள் 5.7.2011.
2) கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித எண்.16313/என்2/11, நாள் 30.8.2011

---------

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2011–12 ஆம் கல்வி ஆண்டில் இரண்டாம் சுழற்சி முறை வகுப்புகளை கையாள்வதற்கு 1661 கௌரவ விரிவுரையாளர்களை புதிதாக நியமனம் செய்யவும், கௌரவ விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ.6000/– வீதம் பத்து மாதங்கள் வழங்கிடவும் ஆணை வெளியிடப்பட்டது.

2. கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாம் சுழற்சி வகுப்பில் பணிபுரியும் முறையான விரிவுரையாளர்களின் பணிப்பளுவும், இரண்டாம் சுழற்சி முறையில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களின் பணிப்பளுவும் ஒன்றாகவே உள்ளது எனவும் இவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியத்தினை ரூ.6000/–லிருந்து ரூ.10,000/–ஆக உயர்த்தி வழங்க கௌரவ விரிவுரையாளர்கள் கோரியுள்ளனர் எனவும் இக்கோரிக்கையை ஏற்று கௌரவ விரிவுரையாளர்களுக்கு மாதம் ரூ.10,000/– தொகுப்பூதியம் உயர்த்தி வழங்கலாம் என தெரிவித்து கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களின் பணித் தன்மையையும், கல்வித் தகுதியினையும் கருத்தில் கொண்டு தற்போது அவர்களுக்கு மாதம் ரூ.6000/– வீதம் வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியத்தினை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேற்காணும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**ஆடவர் கல்லூரிக்கான செலவினக் கணக்குத் தலைப்பு**

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AA. கலைக் கல்லூரிகள் (ஆடவர்) - 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (த.தொ.கு.2202 03 103 AA 3320)

<u>மகளிர் கல்லூரிக்கான செலவினக் கணக்குத் தலைப்பு</u>

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர் கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AB. கலைக் கல்லூரிகள் (மகளிர்) – 33 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (து.தொ.கு.2202 03 103 AB 3328)

5. மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட தொகுப்பூதியம் குறித்த செலவிற்கான கூடுதல் நிதி 2011-2012ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்படும் வரை செலவினை மேற்கொள்ள கல்லூரிக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இருப்பினும், இக்கூடுதல் செலவினம் 2011-2012-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் சட்டமன்றப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும்.

6. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூடுதல் நிதியொதுக்கம் செய்திட ஏதுவாக உரிய கருத்துருவையும், துணை மானிய கோரிக்கையில் சேர்த்திட ஏதுவாக துணைக் குறிப்பினையும் உரிய நேரத்தில் நிதித் துறைக்கு தவறாமல் அனுப்பி வைக்கும்படி கல்லூரிக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.305/DS(KM)/Edn-I/11, நாள் 26.12.11 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.1210 (ஆயிரத்து இருநூற்று பத்து)ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –1/5/35 மற்றும் மதுரை.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
தொடர்புடைய சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.
நிதித்துறை (கல்வி.1 / வ.செ.பொது.I/வ.செ.பொது.II), சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29.12.2011
பிரிவு அலுவலர்.